Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 570/2023

| | | |
|---|---|---|
| Deposition of Witness for | | Prosecution PW 1 |
| | | Defence |
| | | Court |
| Name | : | ராஜேஸ்கண்ணன் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.03.2024

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் ஆண்டாண்கோவில் மேற்குத் தெருவில் குடியிருந்து முசிறியில் தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். எனது அப்பா சண்முகம் வழக்கம்போல் பால் வாங்குவதற்காக ஆத்தூர் பிரிவு ரோட்டிற்கு 09.10.2022 ம் தேதி காலை சுமார் 06.00

Sd/.K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

மணியளவில் சென்றிருந்தார். குட்டக்கடையில் இருந்த ரமேஷ் என்னிடம் எனது அப்பா பால் வாங்கிக்கொண்டு திரும்பி கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்து தெற்கிலிருந்து வடக்காக ரோட்டை கடந்து வந்தபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த Honda cornon இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவர் ஹாரண் அடிக்காமலும் கண்ரோல் இல்லாமலும் வந்து பிரிவு ரோட்டிற்கு வந்த எனது அப்பாவின் மீது மோதி தூக்கிவீசப்பட்டு கிடப்பதாக ரமேஷ் சொன்ன தகவலை கேட்டு சம்பவ இடம் சென்று பார்த்தேன். பேச்சுமூச்சு இல்லாமல் கிடந்த எனது அப்பாலை ஆமபுலன்ஸ் மூலம் காந்திகிராமம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றேன். அங்கு பரிசோதித்த மருத்துவர் எனது அப்பா இறந்துவிட்டதாக கூறினார். இது சம்மந்தமாக கரூர் நகர காவல்நிலையத்தில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது. அந்த கையெழுத்து அ.சா.ஆ. 1. இருசக்கர வாகனத்தின் பதிவு எண். டிஎன் 91 பி 9491 ஆகும். விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் ஓட்டுநர் அங்கு இருந்தார். இன்று அவர் ஆஜரில்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

என்னால் தட்டச்சுருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 570/2023
Prosecution PW 2

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | ஆறுமுகம் |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.03.2024

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் ஆண்டாண்கோவில் மேற்குத் தெருவில் குடியிருந்து ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வுபெற்றுவிட்டேன். கடந்த 09.10.2022ம் தேதி காலை சுமார் 06.15 நான் என்னுடைய வீட்டிற்கு வெளியே நின்றுகொண்டிருந்தபோது சண்முகம் என்பவர் டிவிஎஸ்

Sd/.K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

அக்சஸ் இருசக்கர வாகனத்தில் பால் வாங்கிக்கொண்டு கிழக்கிலிருந்து மேற்காக வந்து வீட்டிற்கு செல்வதற்காக வடக்குபுறமாக திரும்பியபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த பல்சர் போன்ற வாகனத்தில் வந்தவர் வேகமாக வந்து சண்முகம் ஓட்டிசென்ற வாகனத்தின் மீது மோதியதில் தூக்கி வீசப்பட்டார். மோதிய இருசக்கர வாகனத்தில் இருந்தவரும் அடிபட்டு கிடந்தார். ரமேஷ் என்வர் சம்பவம் குறித்து அ.சா.1 க்கு தகவல் சொல்லி அனுப்பியதால் அவரும் சம்பவ இடத்திற்கு வந்துவிட்டார். பின்னர் அடிபட்ட இருவரையும் ஆமபுலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். மதியம் சண்முகம் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். போலிசார் என்னை விசாரித்தனர். பல்சர் போன்ற பெரிய வண்டி இருசக்கர வாகனத்தின் பதிவு எண்ணை நான் பதற்றத்தில் பார்க்கவில்லை. அந்த இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரை நான் பார்த்தேன். அவரைப் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டமுடியும். இன்று அவர் ஆஜரில்லை.

**குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

Crl.Misc.39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

## IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

CC No. 570/2023

Prosecution PW 3

Deposition of Witness for Defence

Court

| | | |
|---|---|---|
| Name | : | பூபதி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| District | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 25.03.2024

**எதிரி ஆஜரில்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல்செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கரூர் மேற்கு ஆண்டாண்கோவில் ஆண்டவர் நகரில் குடியிருந்து நூல் வியாபாரம் செய்து வருகிறேன். நான் எப்போதும் போல 09.10.2022ம் தேதி வாக்கிங்காக காலை சுமார் 06.15 மணியளவில் நடந்து கொண்டிருந்தபோது அக்சஸ்

Sd/.K.Ambiga

நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.

இருசக்கர வாகனத்தில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தவர் அவர் வீட்டிற்கு செல்வதற்கா வடக்காக திரும்பியபோது மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி பெரிய வண்டி இருசக்கர வாகனம் வேகமாக வந்து அக்சஸ் வாகனத்தில் சென்றவர் மீது மோதியதில் இரண்டு வாகனத்தில் வந்தவர்களும் அடிபட்டு கிடந்தனர். அ.சா.1 வீடு அருகில் இருந்ததால் அவரும் சம்பவத்தை கேள்விபட்டு அங்கு வந்துவிட்டார். பின்னர் ஆம்புலன்ஸ் மூலம் அடிபட்டவர்களை மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தோம். சிறிது நேரத்தில் அக்சஸ் இருசக்கர வாகனத்தில் சென்றவர் இறந்துவிட்டதாக கேள்விபட்டேன். பெரிய வண்டி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்தவரை நான் பார்த்தேன். இன்று அவர் ஆஜரில்லை. பார்த்தால் அவரை அடையாளம் காட்டமுடியும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

வாய்ப்பளித்தும் இல்லை.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

S/d K. Ambiga
நீதித்துறை நடுவர் எண்.1,
கரூர்.